2015 ஆகஸ்ட் 26]

தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

மாணவியர் விடுதி

***27707—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாசியிலே அவதரித்த மாசிலா தாயே, மகத்திலே தோன்றிய மாதரசியே அம்மா, தங்களின் பொற்பாதங்களை வணங்கி, வினாவிற்கு விடை அளிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியில் பழங்குடியின மக்களே பெரும்பான்மையாக உள்ளனர். இப்பகுதியில் ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவே உள்ளது. பர்கூர் மலைப் பகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் பழங்குடியினருக்காக இயங்கும் 9 அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளில் 20 சதவிகித இடங்கள் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தும், அப்பள்ளிகளில் ஆதி திராவிட மாணாக்கர்களின் சேர்க்கை மிகவும் குறைவானதாகவே உள்ளது. எனவே, பர்கூர் மலைப் பகுதியில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி தொடங்கிட தற்போது தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 ஆகஸ்ட் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "Impossible is a word to be found only in the dictionary of fools" *என்ற நெப்போலியனின் கூற்றுக்கிணங்க, இல்லை, முடியாது என்ற வார்த்தை எங்கள் தாய் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் அகராதியில் கிடையாது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் பெருமையோடு சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டு மக்களுக்காக தன்னிகரில்லாத் திட்டங்களை எல்லாம் வாரிக் கொடுத்துக் கொண்டிருக்கும் வரலாற்றுத் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதந்தொட்டு வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் மலைப்பகுதியானது 45 கிலோ மீட்டர் சதுர பரப்பளவில் 35 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இங்குள்ள பல்வேறு கிராமங்களில் உள்ள ஆதி திராவிட மாணவிகள் உயர்நிலைக் கல்வி பயில வேண்டுமானால் 10 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும், பேருந்து வசதியில்லாத காரணத்தினால், அவர்கள் அடர்ந்த காட்டுப் பாதையின் வழியாகத்தான் செல்ல வேண்டும். கொடிய வன விலங்குகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளதால், இவர்கள் பாதுகாப்பு கருதி, தொடக்கப் பள்ளிப் படிப்புடன் நின்றுவிடுகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. எனவேதான், இவர்களது பள்ளிகளில் வருகைப் பதிவு குறைவாக உள்ளது. இந்தப் பகுதியில் எந்த ஓர் அரசு விடுதியும் இல்லை. எனவே, இப்பகுதியில் மாணவியர் விடுதி அமைத்துக் கொடுத்து இங்கு படிக்கும் மாணவிகள் விடுதியில் தங்கி உயர்நிலைக் கல்வி பயில வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் ஈரோடு மாவட்டத்தில் 31 ஆதி திராவிடர் விடுதிகளும், 2 பழங்குடியினர் விடுதிகளும், 21 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் உள்ளன. இவற்றில், அந்தியூர் தொகுதியில் மட்டும் 7 ஆதி திராவிடர் விடுதிகளும், ஒரு பழங்குடியினர் விடுதியும், 10 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இவற்றில் அனுமதிக்கப்பட்ட இடங்கள் 1,424 ஆகும். இவற்றில் 20 சதவிகித இடங்கள் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு என ஒதுக்கப்பட்டிருந்தும் இவர்களின் சேர்க்கை மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, ஆதி திராவிடர் மாணவியர்க்கென தனியே விடுதி தொடங்கினாலும், அவ்விடுதிகளில் மாணவியர்களின் சேர்க்கை குறைவாகவே இருக்கும் என்பதால், அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி புதிதாகத் தொடங்கிட தேவை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம்

***61952—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு செயற்கைக்கோள் தகவல் அறிவிப்பு இயந்திரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திக்கெட்டும் இருந்து திறளான வளங்களைத் தெள்ளு தமிழ் பூமிக்குக் கொண்டுவந்து*